ஓ விரனே
எங்கள் மண்ணில் உன் பெயர் எழுதி வைக்கப்படும்
நீ மடியவில்லையடா
உன் கதை முடிய வில்லையடா

விடுதலைபுலியாய் வாழ்ந்த நாளை
வெடிகுண்டின் நடுவில் நின்ற உன் தோளை
அடி நெஞ்சில் நினைப்பவர்கள் ஆயிரம் உண்டு
அதோபார் அவர் கையிலும் வெடி குண்டு
நீ மடியவில்லையடா உன் கதை முடிய வில்லையடா 2

ஓ விரனே
எங்கள் மண்ணில் உன் பெயர் எழுதி வைக்கப்படும்

நீயடைந்த சாவு இங்கே உயிர் ஆனது
நீ எரிந்த உயிர் விதை பயிர் ஆனது 2
தீப்பிடித்து எதிரி முகாம் எரிகின்றது
தீரனே உனது முகம் தெரிகின்றது 2
நீ மடியவில்லையடா உன் கதை முடிய வில்லையடா 2

ஓ விரனே
எங்கள் மண்ணில் உன் பெயர் எழுதி வைக்கப்படும்

காலம் எல்லாம் புலிக்குகையில் நீ தங்கினாய்
கண்மூடியின்று படமாய் தொங்கினாய் 2
பூமாலை உன்படத்தில் போட்டார் தார் போல்
போட்டவரே நஞ்சுமாலை ஏற்றார் தார் போல்
நீ மடியவில்லையடா உன் கதை முடிய வில்லையடா

ஓ விரனே
எங்கள் மண்ணில் உன் பெயர் எழுதி வைக்கப்படும்

இசைத்தட்டு : மாவிரர் வணக்கப்பாடல்
பதிப்பகம் : அகம்